# நடப்பு நிகழ்வுகள்- மே 28 - 2017

- **ஜம்மு – காஷ்மீர்** மாநிலத்தில் பாதுகாப்பு படையினருடன் சனிக்கிழமை (27.05.2017) நடைபெற்ற **இருவேறு துப்பாக்கிச் சண்டையில் 8 பயங்கிரவாதிகள் சுட்டுக்கொள்ளப்பட்டனர்.**

- **கடலூர்** மாவட்டம் **பண்ருட்டி** அருகே **கீழ்காவனூர்** கிராமத்தில் சுமார் **1,000 ஆண்டுகள் பழமையான சமன தீர்த்தங்கரர் சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**

- நீலகிரி மாவட்டம் **குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 59 – ஆது பழக் கண்காட்சியை மாவட்ட ஆட்சியர் பொ.சங்கர் தொடங்கி வைத்தார்.**

- கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தைச் சேர்ந்த Wildlife ரேங்லர்ஸ் அமைப்பு இயற்கை ஆர்வலர்களையும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களையும் கொண்ட அமைப்பாகும். கல்லாறு வனப்பகுதியில் **கோடை மழைக்குப் பின்னர்** மார்மன் , குரோ, ஹெலன் , டைகர்ஸ், மேனி டெய்ல்டு ஓக் புளு, ஆரஞ்சுடிப்ஸ், லைம் போன்ற வகையான **பட்டாம்பூச்சிகளின் வரத்து அதிக அளவில் உள்ளதாக தெரிவித்துள்ளனர்.**

- உலகின் முன்னணி விமான சேவை நிறுவனமான **பிரிட்டிஷ் ஏர்வேஸின் கணினி சேமிப்பகம்** சனிக்கிழமை (27.06.17) **திடீரென முடங்கியது**. இதைத் தொடர்ந்து ஹீத்ரு, காட்விக் மற்றும் பெல் ஃபாஸ்ட் விமான நிலையங்களிலிருந்து புறப்படவேண்டிய விமானங்கள் புறப்பட முடியாமல் நிறுத்தப்பட்டன. கோளாறை சரி செய்ய அனைத்துவித நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாகக் கூறிய பிரிட்டிஷ் ஏர்வேஸ் நிறுவனம் பயணிகளுக்கு ஏற்பட்ட சிரமத்துக்கு மன்னிப்பு கோரியது.

- இணையத்தளம் மூலமாகவும் சமூக வளையத்தளங்கள் மூலமாகவும் **பயங்கரவாதக் கருத்துக்களை பரப்புவதை இணையத்தள சேவை நிறுவனங்கள் தடுக்க வேண்டும் என்று ஜி 7 நாடுகள் வலியுறுத்தியுள்ளனர்.**

- கரூர் வைஸ்யா வங்கியின் 715 ஆவது கிளை சென்னை மந்தைவெளியில் திறக்கப்பட்டுள்ளது.

- **இலங்கையில்** பருவமழை தொடங்கியதையடுத்து தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது இதனால் பல இடங்களில் **வெள்ளப்பெருக்கு நிலச்சரிவு ஏற்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.** மழை வெள்ள நிலச்சரிவுக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 119 – ஆக அதிகரித்துள்ளது. 150 – க்கு மேற்பட்டோர் காணவில்லை. அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்காக இந்தியா சார்பில் **“ஐஎன்எஸ் கிரிச் கிரிவ்” கப்பல் மூலமாக நிவாரணப்பொருட்கள்** அந்நாட்டு தலைநகர் **கொழும்புக்கு** சென்றடைந்தது.

- சேலம் மாவட்டம் **ஏற்காட்டில்** (ஏழைகளின் ஊட்டி) **42 – வது கோடை விழா மற்றும் மலர் கண்காட்சியை தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தொடங்கி வைத்தார்.** இதில் தோட்டக்கலைத் துறை சார்பில் 10 ஆயிரம் மலர்த்தொட்டிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

- **சென்னை பல்கலைக்கழகத்துக்கு** அதே பல்கலைக்கழக பேராசிரியரான **பி.துரைசாமி புதிய துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.** **மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்துக்கு** அந்த பல்கலைக்கழகத்தில் கல்லூரி வளர்ச்சிக் கவுன்சிலின் டீனாகப் பணியாற்றிய **பி.பி. செல்லதுரை புதிய வேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.**

- **மோரீஷஸ் பிரதமர் பிரவிந்த் ஜெகநாத்** 3 நாள் **அரசு முறை பயணமாக இந்தியா வந்துள்ளார்**. பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேசினார். இரு தலைவர்களும் இரு தரப்பு உறவுகள் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து விரிவாக விவாதம் நடத்தினர். அதன் பின் இரு நாடுகளுக்கும் இடையே கடல்சார் பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது. **மோரீஷஸீக்கு 50 கோடி டாலர்** (இந்திய மதிப்பில் சுமார் ரூ3,227 கோடி) **கடனுதவியை இந்தியா வழங்கியுள்ளது.**

- மும்பை மற்றும் தேசிய பங்குச் சந்தைகளில் கடந்த வாரம் நடைபெற்ற வர்த்தகத்தில் சென்செக்ஸ் (26.5.2017) 31,000 புள்ளிகளைத் தாண்டி புதிய சிகரத்தை தொட்டது.